கிண்ணியா பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 03 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 ஆகஸ்ட் 07 ஆம், 2019 நவம்பர் 06 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 கிண்ணியா பிரதேச சபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் கடன் பதிவேட்டின் படி ஊழியர் கடன் மீதி ரூபா 1,723,232 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடன் மீதி ரூபா 1,816,183 ஆகக் காணப்பட்டது. இதனால் ஊழியர் கடன் மீதி ரூபா 92,951 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஊழியர் கடன் பதிவேடு முறையாகப் பேணப்படுதல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் குறித்த தொகையானது தவறுதலாக அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. இத் தொகை 2019 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கறிக்கையில் சீர் செய்யப்படும். |

#### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,227,497 தொகையான ஓய்வூதிய பங்களிப்பு மீதி கொடுத்து தீக்கப்படாது 10 வருடங்களாக நிதிக்கூற்று மீதியில் காட்டப்பட்டு வருகின்றது. | ஓய்வூதிய பங்களிப்புத் தொகை செலுத்தி முடிக்கப்படல் வேண்டும். | 2006.04.15 ஆம் திகதி கிண்ணியா பிரதேச சபை நகர சபையாக தரம் உயர்த்தப்பட்டதுடன் கிண்ணியா பிரதேச சபையானது புதிதாக உருவாக்கப்பட்டது. புதிதாக உருவாகக்கப்படுவதற்கு |

| | | |
|---|---|---|
| | | முன்னரான காலப்பகுதியில் இருந்து இந் நிலுவைத் தொகை கிண்ணியா பிரதேச சபைக்குரியதாக காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்துக்கு விபரங்கள் கோரப்பட்டுள்ளது. கிடைக்கப் பெற்றதும் எதிர்காலத்தில் இவ்விடயம் சீர் செய்யப்படும். |

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

| சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை | நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தருக்கு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கக்பட்டுள்ளது. |

1.4 இணங்காமைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் பிரிவு 173 | சபையினால் மேற்கொள்ளப்படும் அனைத்து வழங்கல் சேவைகளுக்கும் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும் சபையினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் வாடகைக்கு வழங்கப்பட்ட 06 இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் சந்தைக் கடைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை செய்து கடைகள் வழங்கப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 06 இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் சந்தை கடைக்கு உடன்படிக்கைகள் செய்யப்பட்டள்ளது. |
| ஆ) மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் | ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் | வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திர | இது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 203 | பெறப்படல் வேண்டும். எனினும் பயன்படுத்தப்பட்டு வரும் 08 வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரம் 2018 ஆம் ஆண்டு வரை பெறப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருகின்றது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,366,600 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 2,707,431 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வாடகை | 4,585 | 6,910 | 4,915 | 1,996 | 4,875 | 5,044 | 2,550 | 2,494 |
| அனுமதி பத்திர கட்டணம் | 1,470 | 2,861 | 916 | 1945 | 2,210 | 819 | 819 | 819 |

மீளாய்வாண்டில் அனுமதி பத்திர கட்டணம் கடந்த வருடத்தை விட ரூபா 1,126,000 தொகையால் ஆல் அதிகரித்துள்ளது. இது அனுமதி பத்திர கட்டண அறவீட்டில் மந்த நிலைமையைக் காட்டுகின்றது.

2.2.2 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து வீத வரியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்கான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றது. ஆனால் இது வரை முற்றுப் பெறவில்லை. |

2.2.3 இறைச்சிக்கடை குத்தகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இறைச்சிக்கடை குத்தகையாளர்கள் குத்தகையை செலுத்தத் தவறும் போதே அவர்களது பாதுகாப்பு வைப்பிலிருந்து குத்தகைத் தொகையை அறவிடாமல் வருட இறுதியிலே இந்நடைமுறை பின்பற்றப்படுவதனால் ரூபா 7,273,843 தொகையான நிலுவை நிலுவைகள் அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. மேலும் ரூபா 7,098,912 தொகையான நிலுவைகளுக்கு சபையினால் காலப்பகுப்பாய்வை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | காலப்பகுப்பாய்வு சமர்ப்பிப்பதுடன் நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த சில ஆண்டுகளுக்கு மாத்திரமே விபரங்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. கடந்த கால விபரங்களை பெறமுடியாதுள்ளமையினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது. ஆகவே, இது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.4 வாடகை வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கச்சக்கொடி தீவு பொதுச் சந்தைக் கட்டடத்தைக் குத்தகைக்கு வழங்குதல் | | |
| புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 21,510,853 தொகைக்கு 2014 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டடத்தொகுதியில் காணப்படும் 36 கடைகள் மற்றும் 32 திறந்தவெளிக் கடைகளை கிண்ணியா பிரதேச சபையானது வாராந்த சந்தை நடவடிக்கைக்காக கடை ஒன்றிடமிருந்து ரூபா 30,000 தொகையையும் திறந்தவெளிக் கடை ஒன்றிடமிருந்து ரூபா 20,000 தொகையுமாக ரூபா 1,720,000 தொகையினை மீளளிக்கத்தக்க வைப்பாக அறவிட வேண்டியிருந்த போதிலும் இன்றுவரை ரூபா 593,000 தொகையினை மாத்திரமே சபை அறவீடு செய்துள்ளது. | கடைகளை குத்தகைக்கு வழங்கப்படும் போது அறவிட வேண்டிய மீளளிக்கத்தக்க முழுத்தொகையினையும் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக சபையினால் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. |

2.2.5 முத்திரைத் தீர்வை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை பெறப்படக்கூடிய முத்திரைத் தீர்வை கணிப்பீடு செய்து அவற்றை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முத்திரைத் தீர்வை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆண்டுக்குரிய முத்திரை தீர்வை கணப்பீடு தற்பேது முடிவடைந்துள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

அ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைவதற்குத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை சபையினால் திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்திற்கு ரூபா 27,272,144 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் சபையினால் சேகரிகப்படும் கழிவுகள் வகைப்படுத்தப்படாது அப்பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றது. மேலும் திண்மக்கழிவு பசளை தயாரிப்பதற்குரிய இயந்திரங்கள் சபையில் காணப்படாமையினால் அச் செயற்பாடு இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் எதிர்பாத்த விளைவினை அடையமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. | கழிவுகளை வகைப்படுத்தி பசளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது கழிவுகள் வகைப்படுத்தல் ஆரம்பமாகி யுள்ளதுடன் இயந்திரங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |

(ஆ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2000 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1533/16 இலக்க 2008 சனவரி 25 ஆம் திகதிய வர்த்தகமாணி அறிவித்தலின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து உரிமம் பெறப்படாது விலங்கறுமனைகள் நடாத்தப்படுகின்றது. மேலும் இங்கு அறுக்கப்படும் விலங்குகளின் இரத்தம் மற்றும் கழிவுகள் அருகிலுள்ள ஆற்றில் கலக்கப்படுதல் காரணமாக சுற்றாடல் மாசடைவதற்கு வழிவகுத்துள்ளது. | சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டு உரிய முறையில் கழிவுகளை அகற்றுவதற்கான தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது Seylan Farm நிறுவனத்துடன் புதிய விலங்கறுமனை அமைப்பதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் தற்போது பாவனையில் உள்ள விலங்கறுமனையை மூடி விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை சபை தயாரித்து அதுதொடர்பாக முன்னேற்ற நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | சபைக்குரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இணங்கண்டு அவற்றை அடைவதற்குரிய நடவடிக்கைகளை சபையினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | இது தொடர்பாக சபையினால் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2008 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் ரூபா 548,525 தொகையை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பி வைக்க சபை இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓய்வூதியப் பங்களிப்புப் பணத்தினை உரிய நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக சபையினால் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) 2015 மே 20 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றிக்கை இலக்கம் 11/2015 இன் பிரிவு 05 இன் பிரகாரம் அரச அலுவலகர்களுக்கான மதிய உணவு இடைவேளை 30 நிமிடங்களே மாத்திரமாகும். இதற்கு முரணான வகையில் சபையில் கடமை புரியும் ஊழியர்கள் 30 நிமிடம் தொடக்கம் 2.30 மணித்தியாலங்களுக்கு மேல் மதிய உணவு இடைவேளை எடுப்பது அவதானிக்கப்பட்டது. இதன்போது சுற்றுநிருபத்திற்கமைய அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது நிறுவனத்தலைவரின் பொறுப்பாகும். | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் மேற்கொள்ளப் படுமிடத்து உரிய நடவடிக்கை எடுப்பதுடன் ஐயவினாவில் குறிப்பிட்ட காலத்தில் மீறப்பட்ட விடயத்திற்கு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மதிய உணவு இடைவேளை தொடர்பாக சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் இனி வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் மேற்கொள்ளப்படுமிடத்து உரிய உத்தியோகத்தர்களின் சொந்த விடுமுறையில் கழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) 03/2014(i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் செயலாளருக்கு மாதாந்தம் ரூபா 2,000 தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 2015 சனவரி மாதம் தொடக்கம் வழங்கப்பட வேண்டியிருந்தும் சபையின் செயலாளருக்கு 2014 யூன் மாதம் தொடக்கம் 2017 பெப்ரவரி மாதம் வரை 33 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 2,000 படி ரூபா 66,000 தொகை கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. எனவே 2014 யூன் தொடக்கம் 2014 திசெம்பர் வரையான 07 மாத காலப்பகுதிக்கு ரூபா 14,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் ரூபா 14,000 வை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஈ) அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 3/2017 ஆம் இலக்க 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் பிரிவு 4 இன் பிரகாரம் அரச ஊழியர்களின் உள்வருகை வெளிச்செல்கை விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு அது தொடர்பான | சபையின் உத்தியோகத்தர்களின் உள்வருகை வெளிச்செல்கை விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த நடவடிக்கை | விரல் அடையாள இயந்திரம் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. தற்போது அதனை திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| அறிக்கைகளை சபையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் தொடக்கம் இன்று வரை அவ்வாறு செய்ய சபை தவறியிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | |
| (உ) அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் 20/2018 ஆம் இலக்க ஆகஸ்ட் 21ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்த அடிப்படைச் சம்பளம் ரூபா 43,480 தொகைக்கு மேல் காணப்படும் போது மட்டுமே இணைந்த படியாக ரூபா 1,000 தொகையை பெறமுடியும். சபையின் செயலாளருக்கு 2018 ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் மாதம் வரையான அடிப்படைச் சம்பளம் ரூபா 34,942 ஆகக் காணப்பட்ட போதிலும் ரூபா 1,000 தொகையினை கோரி 407, 479, 495, 569 ஆகிய இலக்க உறுதிச்சீட்டுக்களில் ரூபா 32,595 தொகையினைப் பெற்றிருந்தார். சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 27,895 தொகையே இவருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் ரூபா 4,700 தொகையினை மேலதிகமாக கோரிப் பெற்றிருந்தார். | மேலதிகமாக வழங்கப்பட்ட தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் ரூபா 4,700 வை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 4.4 இன் பிரகாரம் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட கடன்களை முழுமையாக அறவீடு செய்ய முன்னர் அவ் உத்தியோகத்தர் மரணிப்பார் எனின் அவரின் வாரிசுகளுக்குச் சேரவேண்டிய ஓய்வூதியப் பணத்திலிருந்து கழித்துக் கொள்ளுமாறு ஓய்வூதியப் பணிப்பாளருக்குத் தெரிவித்தல் வேண்டும். இவ்வாறு சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 08 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 134,694 தொகையான கடனை சபையினால் அறவிடமுடியாதிருந்தது. | உரிய நடவடிக்கை ஊடாக அறவிட வேண்டிய தொகையையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 15.04.2006 ஆம் திகதி கிண்ணியா பிரதேச சபை நகர சபையாக தரம் உயர்த்தப் பட்டதுடன் புதிதாக கிண்ணியா பிரதேசசபை உருவாக்கப் பட்டுள்ளது. கிண்ணியா பிரதேச சபை உருவாக்கத்திற்கு முன்னரான காலப்பகுதியில் அறவிட வேண்டிய ரூபா 134,694 தெகையே நிலுவையாக காட்டப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு செயற்றிறன்மைகள்

3.4.1 சொத்து முகாமைத்துவம்

3.4.1.1 உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளுக்கிடையில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களிட மிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 05 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு வழங்கப்பட்ட வாகனங்களை சபையின் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |

3.4.1.2 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் பொது மலசலகூடம் ரூபா 1,000,000 தொகைக்கு நிர்மாணிக்கப்பட்டு ஒப்பந்தக்காரரால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இக் கட்டடத்தினை சபை பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்காததால் இன்று வரை பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்படுகின்றது. | உரிய கட்டடத்தை பொதுமக்களின் பாவனைக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குழாய் நீர் விஸ்தரிப்பு இல்லாத காரணத்தினால் அடி குழாய் (Tube Well) அமைப்பது தொடர்பாக ஆலோசனைகள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபையில் காணப்படும் மோட்டார் வாகனம், இரண்டு முச்சக்கர வண்டி, இரண்டு பிக்கப் என்பன 03 வருடங்கள் தொடக்கம் 06 வருட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கையினை எடுத்து கணக்காய்விற்கு அறியத்தரப்படல் வேண்டும். | ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

3.5 பெறுகை

3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் இது தொடர்பான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கச்சக்கொடி தீவு மீன் சந்தைக் கட்டடத்திற்கு நீர் இணைப்புப் பெறல் | | |
| கச்சக்கொடி தீவு மீன் சந்தை கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட போது அக்கட்டட கணியச்சிட்டையில் 2018 திசெம்பர் மாதம் நீர் இணைப்பு பெறப்பட்டதாக ரூபா 18,000 தொகை ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு சபையினால் செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 சனவரி 29 ஆம் திகதி சபையினாலேயே ரூபா 25,155 தொகை செலுத்தி நீர் இணைப்பு பெறப்பட்டது. எனவே செய்யப்படாத வேலைக்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 18,000 தொகை மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக வழங்கப்பட்ட தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கச்சக்கொடித்தீவு மீன் சந்தைக்குரிய பிடிகாசு காணப்படுவதனால் மேலதிகமாக வழங்கப்பட்ட ரூபா 18,000 தொகையை கழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| (ஆ) திண்மக்கழிவு சேகரிப்பு நிலைய நிர்மாணம் | | |
| திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ரூபா 11,406,212 பெறுமதிக்கு திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையத்திற்கு சுற்று மதில் மற்றும் கம்பிவலையால் சுற்றுவேலி என்பவற்றை நிர்மாணித்தல் மற்றும் மின் விளக்கு பொருத்துதல் போன்ற வேலைகளுக்கான உடன்படிக்கை ஒப்பந்தம் சபையினால் 2017 | | |

| | | |
|---|---|---|
| செப்தெம்பர் 07 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) சுற்றுவேலி அமைத்தல் மற்றும் மின் விளக்குப் பொருத்துதல்<br>------------------------------------------------------<br><br>* மின் விளக்கு பொருத்துவதற்காக கொங்கிரீட் தூண் பயன்படுத்தப்பட வேண்டுமென ரூபா 150,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கொங்கிரீட் தூணைப் பயன்படுத்தாது GI Pipe மூலம் மின் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தது. | பொறுப்பான அதிகாரியுடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இலங்கை மின்சார சபையிடமிருந்து மின் கம்பம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அவற்றை பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை மின்சார சபைக்கு விடுக்கப்பட்டிருந்தும் அது கிடைக்கப்பெறாமையினாலும், குறித்த காலப்பகுதியினுள் வேலையினை முடிவுறுத்த வேண்டியதாலும் மேலும், குறிப்பிட்ட இடப்பரப்பானது அதிகம் என்பதால் மின்சார சபையின் போஸ்ட் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுக்கு சுமார் 4 மாத்திரமே பெறமுடியும் என்பதால் GI pipe 11 பொருத்தப்பட்டது. இது போன்ற மாற்றங்கள் எதிர்காலத்தில் நிகழாது இருப்பதற்கு கூடிய கவனம் எடுக்கப்படும். |

3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
---------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------------- | -------------------- | ----------------------------------------------- |
| சபையில் 2011 சனவரி தொடக்கம் திசெம்பர்வரையான காலப்பகுதியில் கடமை புரிந்த 13 ஊழியர்களுக்கான சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் ரூபா 462,112 தொகையையும் 2012 சனவரி தொடக்கம் 2013 ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் கடமை புரிந்த 16 ஊழியர்களுக்கான சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் ரூபா 748,864 தொகையையும் குறித்த காலத்தில் செலுத்தத் தவறியமையால் தண்டப்பணம் ரூபா 540,770 தொகையை சபை செலுத்தியிருந்தது. | காலதாமதத்திற்குரிய உத்தியோகத்தரை இணங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது விடயம் தொடர்பில் உள்@ராட்சி உதவி ஆணயையாளரின் ஆலோசனையைப் பெற்று சபை அனுமதியுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |